[6th March 1968

(இ) அக்கல்லூரிக்கான கட்டிடங்கள் பீலமேட்டில் விளாங்குரிச்சி கிராம எல்லையில் அமைக்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். எத்திராஜுலு : தலைவரவர்களே, மாவட்டத்திற்கு மாவட்டம் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கை அரசாங்கத்திற்கு ஏதாவது இருக்கிறதா ? அப்படியானால் எந்தெந்த மாவட்டங்களில் இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டு ஏற்படுத்தப்படும் ?

MR. CHAIRMAN : இது கோயம்புத்தூர் கல்லூரியைப் பற்றிய கேள்வி. அது பற்றி வேறு கேள்விதான் போட வேண்டும்.

திரு. கே. எஸ். அப்துல் வஹாப் : கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க மொத்த (allotment) தொகை எவ்வளவு ? இதில் மத்திய அரசு கொடுத்த தொகை எவ்வளவு ? மாநில அரசு கொடுத்த தொகை எவ்வளவு ? நன்கொடை மூலம் வசூலித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : நன்கொடை மூலம் ரூ. 25 லட்சம் வசூலித்துத் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் ரூ. 5 லட்சம்தான் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் முயற்சியால் கட்டிடம் கட்டுவதற்கு இடம் தருவதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். மொத்தம் ரூ. 175 லட்சம் என்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்து, (advance equipment) முதலியவைகளைச் சேர்த்து ரூ. 2½ கோடியாகும்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note*—An An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENTS

(1) DECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 2-00 p.m. to-day, the following further programme of business has been decided :—

25th March	Presentation of the Final Supplementary Statement of Expenditure for 1967–68.
26th March	Discussion on the Final Supplementary Statement of Expenditure.
27th March	Non-Official day.
28th March	No meeting.
29th March	Holiday
30th March	Consideration of Appropriation Bills.
1st April	(1) Consideration of official Bills and Government Resolution. (2) Valedictory speeches.

The Council will sit from 3 to 6 p.m. daily and adjourn on 1st April.

(2) ELECTION OF SIX MEMBERS TO THE HOUSE COMMITTEE.

Mr. CHAIRMAN : I have to inform the House that the following six candidates have been validly nominated for election to the House Committee for the financial year 1968–69 :—

1 Thiru G. Krishnamoorthy.

2 Thiru C. V. Rajagopal.

3 Thiru M. Aiyasamy.

4 Thiru A. Ponnappa Naidu.

5 Thiru M. Ethirajulu.

6 Thiru C. P. Chitrarasu.

As the number of candidates nominated is equal to the number of vacancies to be filled, namely, six, I hereby declare them to have been duly elected to the House Committee.

In addition to the above, under Rule 173(1) of the Council Rules, I nominate the following two Members to be the Members of the said Committee—

1 Thiru Mohanlal Mehta.

2 Thiru M. Sankaralingam Pillai.

The Deputy Chairman of the Council shall be ex-Officio Chairman of the Committee.

III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1968–69—(*cont.*)

திரு. வில்சன் அபோலஸ் : தலைவரவர்களே, 1968–69-ம் ஆண்டில் உள்ள வரவு செலவுத் திட்டம் ஒரு உபரி பட்ஜெட்டாக இருந்தாலும் பல துறைகளிலும் பல வேலைகளிலும் செலவழிக்க வேண்டிய தொகைகள் அவைகளுக்குச் சரியாக ஒதுக்கப்படவில்லை. ஜில்லா ரோடுகளும், பஞ்சாயத்து ரோடுகளும், பஞ்சாயத்து யூனியனிலுள்ள ரோடுகளும் பழுதாகிக் கிடக்கின்றன. அவைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை சரியாக ஒதுக்கப்படவில்லை. இன்னும் ஆற்றங்கரையிலுள்ள ரோடுகள் பழுதடைந்து கிடக்கின்றன. அவைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகைகள் ஒதுக்கப்படவில்லை. அதனால் விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய சாமான்களையும் அவர்களுக்கு வேண்டிய சாதனங்களையும் கொண்டுபோக முடியவில்லை. ஆகவே, அதற்கு வேண்டிய தொகை, ஒதுக்கப்பட வேண்டும். பொதுவாக ரோடுகள் அமைப்பதற்கு பணம் ஒன்றும் ஒதுக்கப்படவில்லை. கன்னியாகுமரி ஜில்லாவில் ரோடுகள் புதிதாக அமைப்பதற்கு பணம் ஒதுக்கப்படவில்லை. நாகர்கோவில் முனிசிபல் கவுன்சில், மக்கள் நிலம் விட்டுக் கொடுத்து ரோடு போட்டுத் தாருங்கள் என்று கேட்டால் நீங்கள் ரோடு போட்டுத் தாருங்கள் அதை எடுத்துக்கொள்கிறோம் என்கிறார்கள். ஏன் என்று கேட்டால் அது தான் சட்டம் என்று சொல்கிறார்கள். இந்த அரசு அதற்கு வேண்டிய சட்டத்தை மாற்றி புதிய ரோடுகளையும் மின்சார வசதியையும், குடி தண்ணீர் திட்டத்தையும் செய்து கொடுக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி ஜில்லாவில் மழை இல்லாத ஒரு தாலுக்கா விளவங்கோடு தாலுக்கா. அங்கே இருக்கும் மக்களுக்கு குடிக்கவும், குளிக்கவும் தண்ணீர் கிடையாது. சித்தார்-பட்டணம்கால் திட்டம் நிறைவேறினால்தான் அவர்களுக்கு நிவர்த்தி கிடைக்கும். அந்தத் திட்டம் விரைவில் பூர்த்தி ஆவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன் ஆண்டுகளை விட இந்த ஆண்டு ஒதுக்கிய தொகை குறைவு. சிறு நீர்ப்பாசனத்திற்காக கன்னியாகுமரி ஜில்லாவிற்குப் பணம் எதுவும் ஒதுக்கப்படவில்லை. குளங்கள் வண்டல்